சுருக்கம்

பணியமைப்பு - வேளாண்மை - உழவர் நலத்துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பி) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி த. அபிநயா என்பவரின் பணியினை 16.02.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வேநி9) துறை

அரசாணை (3டி) எண். 17

நாள்: 01.03.2022
பிலவ வருடம்
மாசி திங்கள் 17,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.305, வேளாண்மைத் (வே.நி.9) துறை, நாள் 23.12.2020.

2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.அநிபி2/34899/2021, நாள் 25.05.2021 மற்றும் 17.08.2021.

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பணிக்காலத்தில் மரணமடைந்த திரு மு. தங்கவேல், வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களின் வாரிசு / மகள் திருமதி த. அபிநயா என்பவருக்கு, கருணை அடிப்படை பணி நியமனம் கோரிய விண்ணப்ப நாளில் திருமணம் ஆகியுள்ளதால், தனியர் சார்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 15.ஐ அச்சட்டப்பிரிவு 58-இன்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்வு செய்து, தனியரின் 04.06.2013 நாளிட்ட விண்ணப்பத்தினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிஅ) / இளநிலை உதவியாளர் (பி) / ஆய்வக உதவியாளர் பதவியில் மூதுரிமை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில், அம்மாபேட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில், வேளாண்மை உதவி இயக்குநராகப் பணிபுரிந்து வந்தபோது 25.02.2013 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த (லேட்) திரு மு. தங்கவேல் என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது மகள் திருமதி த. அபிநயா என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 95969 / 2019, நாள்

12.02.2021-ன்படி, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பி) பணி நியமனம் செய்து ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, ஈரோடு, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அ2 / 2043 / 2017, நாள் 16.02.2021-ன்படி தனியர், கொடுமுடி, வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள கருமாண்டம்பாளையம், துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடங்கு மேலாளர் (தரம்-3) / இளநிலை உதவியாளராக (பி), 16.02.2021 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 16.02.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பி) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பி) பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி த. அபிநயா என்பவரின் பணியினை 16.02.2021 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ. சா. எண் 3172 / க்யூ.1 / 2022-1, நாள் 17.02.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண் 5979 / ஜி1 / 2022, நாள் 26.02.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 (இ).
திருமதி த. அபிநயா, இளநிலை உதவியாளர் (பி)
<u>வழி:</u> வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண் 11148 / வேநி9 / 2021
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்